**STARTING TIME 11.08 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 240/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigaiselvam, Senior Bailiff of this court, on 19.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **நிர்மலா** Husband's Name : **சீனிவாசன்**

Address : கதவு எண். 238, போர்டிங்பெட் மேற்கு தெரு, சோளிங்கர், சோளிங்கர் தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 65

**1, 2, 4, 6, 7 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

15. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.28 ஆவணங்களை பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், எனக்கு தெரியாது, என் கணவருக்கு தான் தெரியும். அந்த ஆவணங்களில் உள்ள சாரம்சங்கள் பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான்.

16. வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.28 வரையான ஆவணங்கள் சீனிவாசன் என்பவரால் மத்திய, மாநில அரசுகளுக்கு அனுப்பிய கடிதங்களின் நகல்கள் என்றால், சரிதான். அந்த கடிதங்களுக்கு அரசு தரப்பில் இருந்து அனுப்பிய பதில்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், தாக்கல் செய்துள்ளேன். குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் எந்த ஆவணங்கள்

அந்த பதில் கடிதங்கள் என்றால், அது பற்றி தெரியவில்லை.

17. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கேட்டு என் கணவர் அனுப்பிய வா.சா.ஆ.25 கடிதத்தின் பேரில் அனுப்பிய தகவல்கள் வா.சா.ஆ.26–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.26 கடிதத்தில் சர்வே எண் 453/B–என்ற நிலம் எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்ற தகவலுக்கு UDR பதிவேட்டிற்கு முன்பாகவே உட்பிரிவு செய்யப்பட்டது என தகவல் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

18. தாவா சொத்தின் பழைய சர்வே எண் என்னவென்றால், 453A/1B ஆகும். அந்த சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால், 53 செண்ட் ஆகும். அந்த சர்வே எண்ணில் உள்ள சொத்து எத்தனை எண்களில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால், அது பற்றி தெரியவில்லை. உட்பிரிவின்படி எத்தனை நபர்களின் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்ற விவரமும் தெரியுமா என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை.

19. வா.சா.ஆ.26 கடிதத்தின்படி 453/B–ல் உள்ள சொத்து சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டதாக தெரிய வருகிறது என்றால், சரிதான், ஏனெனில் அந்த சொத்தை எனது கணவரின் தாத்தாவும், அவர் காலமான பிறகு எனது கணவரின் தகப்பனாரும் பயன்படுத்தி வந்தனர். அதுபோல் அந்த சொத்தை எனது கணவரின் தாத்தாவும், தந்தையும் அனுபவித்து வந்தார்கள் என்பதற்கு ஆதரமாக பதிவுதுறை ஆவணங்களையோ, வருவாய்துறை ஆவணங்களையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

20. வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.28 வரையான ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு ஏற்பட்ட ஆவணங்கள் என்றால், சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்த நிலையில், வேண்டுமென்றே அரசு அலுவலகத்தில் வேறு பரிகாரங்கள் கேட்டு வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.28 வரையான ஆவணங்களை உருவாக்கியுள்ளோம் என்றால், சரியல்ல.

21. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு என் கணவர் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பினாரா என்றால், அனுப்பினார். அந்த அறிவிப்பை மாவட்ட ஆட்சியருக்கும் அனுப்பியுள்ளார் என்றால், சரிதான். ஆனால் இவ்வழக்கில் மாவட்ட ஆட்சியரை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். அத்தியாவசிய தரப்பினரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த காரணத்தினாலேயே வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

22. வழக்கு நிலுவையில் இருந்த பிறகு மாவட்ட ஆட்சியருக்கு சில கடிதங்களை அனுப்பி வைத்துள்ளோம் என்றால், சரிதான். வா.சா.ஆ.21 அறிவிப்பின் பேரில், விசாரணைக்கு என் கணவர் ஆஜரானாரா என்றால், ஆஜரானார். எந்த தேதியில், எந்த இடத்தில் அந்த விசாரணைக்கு என் கணவர் ஆஜரானார் என்றால், அது பற்றி தெரியவில்லை. அந்த விசாரணையில் பிறப்பித்த இறுதி உத்தரவு எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

23. இவ்வழக்கு சொத்தில் எந்த வித ஆவணம் மூலமாகவும் எங்களுக்கு உரிமை இல்லாத நிலையில், பிரதிவாதிகளுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டும் என்பதற்காகவும், தாவா சொத்தை அபகரிக்க வேண்டியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல.

24. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல்களை எடுத்து படித்து பார்த்தேனா என்றால், நான் பார்க்கவில்லை, ஆனால் என் கணவர் பார்த்துள்ளார். என் கணவர் காலமான பிறகு, இவ்வழக்கின் பிரதிவாதிகள் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள், என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை நான் தெரிந்துக் கொண்டேனா என்றால், இல்லை.

25. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்கு மூலமே ஏற்படவில்லை

என்றும், அதனால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல. தாவா பரிகாரத்தை சரியாக மதிப்பிட்டு முறையாக நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றும், எனவே அவ்வகையிலும் தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல. நான் தாவாவை முறையாக மதிப்பீடு செய்திருந்தால், இவ்வழக்கை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு பணவரையறையே இருந்திருக்காது என்றால், சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு கோடி கணக்கில் வரும் என்றால், சரிதான். தாவாவை முறையாக மதிப்பீடு செய்யவில்லை என்று பதிலுரையில் குறிப்பிட்டு கூறியும் தாவாவை முறையாக மதிப்பீடு செய்யவே இல்லை என்றால், சரியல்ல.

26. அத்தியாவசிய தரப்பினரை சேர்க்காததாலும், தேவையற்ற நபர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளதாலும் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அவ்வகையில் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல. என் கணவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. எனவே, தாவாவை பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

1, 2, 4, 6, 7 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்ளவதாக தெரிவிக்கப்பட்டது.

8-ம் பிரதிவாதி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 1, 2, 4, 6, 7 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார்.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 11.48.A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.01.19 16:01:02 +0530